# வீடு மற்றும் சமூகப் பராமரிப்பு ஆதார உதவிச் சேவைகள் நோயாளர் உரிமைகளுக்கான சட்டவரைவு

நீங்கள் ஒரு நோயாளராகவோ அவரின் குடும்ப அங்கத்தவராகவோ அவருக்குப் பதிலாக முடிவு எடுப்பவராகவோ அல்லது அவருக்குப் பராமரிப்பு வழங்குபவராகவோ இருக்கும் ஒருவர் என்ற முறையில், வீடு மற்றும் சமூகப் பராமரிப்பு ஆதார உதவிச் சேவைகள் அமைப்பின் ஒவ்வொரு பணியாளரும் நிர்வாக சபை அங்கத்தவரும் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் அமர்த்தப்பட்டு உள்ள ஆரோக்கிய சேவை வழங்குநரும் பின்வரும் வழிகளில் உங்கள் உரிமைகளுக்கு மதிப்பளித்து அவற்றை முன்னெடுக்க முயலுவர் என்று எதிர்பார்க்கும் உரிமை உங்களுக்கு உண்டு:

1. உங்களை மரியாதையான ஒரு முறையில் நடாத்துவதுடன் உடலியல், பாலியல், உளநலம், உணர்ச்சிகள், வார்த்தைகள் மற்றும் பொருளாதார விடயங்கள் சார்ந்த எவ்வித துன்புறுத்தலும் இல்லாதவாறு உங்களுடன் உறவாடுதல்.
2. உங்களுடைய கௌரவம் மற்றும் அந்தரங்க நிலை ஆகியவற்றுக்கு மரியாதை கொடுக்கின்ற முறையில் நடந்து கொள்வதுடன், நீங்கள் சுயமாகச் செயற்படுவதையும் மற்றும் தீர்மானங்களை எடுப்பதில் உங்கள் பங்களிப்பை வழங்குவதையும் ஊக்குவித்து நிற்றல்.
3. உங்கள் தனித்த நிலைப்பாட்டுக்கு அங்கீகாரம் வழங்கும் ஒரு முறையில் உங்களை நடாத்துவதுடன், உங்களுடைய இனம், மதம், மொழி, குடும்பம் மற்றும் கலாச்சார காரணிகள் உள்ளடங்கலாக உங்கள் தேவைகள் மற்றும் தெரிவுகளைப் புரிந்து கொண்டு அவற்றுக்கு ஏற்றவாறு பதில் வினைகளைப் புரிதல்.
4. பாகுபாடு எதுவும் இல்லாதவாறு மனித உரிமைகள் விதிமுறைக் கோவை மற்றும் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களுக்கான கனேடிய பட்டயம் (*Human Rights Code or the Canadian Charter of Rights and Freedoms*) விதிக்கும் முறைகளுக்கு அமைவாக உங்களுக்கு வீடு மற்றும் சமூக பராமரிப்பு சேவைகள் வழங்கப்படுதல்.
5. முதல் தேசிய இனங்கள், மெற்றிஸ் அல்லது இனூக் இனத்தைச் சேர்ந்த ஒரு நோயாளி கலாச்சார ரீதியாகப் பாதுகாப்பான ஒரு முறையில் வீடு மற்றும் சமூகப் பராமரிப்பு சேவைகளைப் பெறும் உரிமையைக் கொண்ட ஒருவராக இருத்தல்.
6. நீங்கள் அணுகிப் பெறக்கூடிய ஒரு வடிவத்தில், உங்களுக்கான வீடு மற்றும் சமூகப் பராமரிப்பு சேவைகள் பற்றித் தெளிவான தகவல் உங்களுக்கு வழங்கப்படுதல்.
7. உங்கள் தேவைகள் பற்றிய மதிப்பீடு மற்றும் மீளவும் இடம்பெறும் மதிப்பீடு ஆகியவற்றிலும், உங்களுக்கான பராமரிப்புத் திட்டத்தினை உருவாக்கி அமைப்பதிலும் அதனை மீளாய்வு செய்து கொள்வதிலும் நீங்கள் பங்குபற்ற முடிதல்.
8. மதிப்பீடுகளின் பொழுது உங்களுடன் பிரசன்னமாக இருப்பதற்கு என்றும் உங்களுக்கு உரிய பராமரிப்புத் திட்டத்தினை உருவாக்கி, பரிசீலனை செய்து அதனை மீளாய்ந்து திருத்தம் செய்வதில் உங்களுடன் சேர்ந்து பங்குபற்றுவதற்கு என்றும், நீங்கள் ஒருவரை நியமிக்க முடிதல்.
9. உங்களுக்கு வழங்கப்படும் சேவைகளை ஒருங்கிணைந்த முறையில் பெறுவதற்கும் உதவி வழங்கப்படுதல்.
10. வீடு மற்றும் சமூக பராமரிப்புச் சேவையினர் வழங்கும் ஏதாவது ஒரு சேவைக்கு உங்கள் இணக்கத்தை வழங்கவோ அல்லது அதனை மறுக்கவோ உங்களால் முடிதல்.
11. நீங்கள் பெறும் சேவைகள் தொடர்பிலான கரிசனங்களை வெளியிடவும் அவற்றுக்கான மாற்றங்களைப் பரிந்துரைக்கவும், உங்களால் முடிதல். உங்கள் நலன்களைப் பாதிக்கின்ற கொள்கைகள் மற்றும் தீர்மானங்கள் தொடர்பாகவும் இதனை நீங்கள் செய்யலாம். இவ்வாறு செய்யும் பொழுது எவரினதும் தலையீடு, தூண்டுதல், பாகுபாடு அல்லது எதிர்வினை என்ற எதற்கும் பயப்படாமல் உங்களால் செயற்பட முடிதல்.
12. வீடு மற்றும் சமூக பராமரிப்புச் சேவைகள் வழங்கப்படும் முறையில் தாக்கத்தினை உண்டாக்கும் சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் கொள்கைகள் பற்றிய தகவலினைப் பெறும் உரிமை உங்களுக்கு இருத்தல். நோயாளர் உரிமைகளுக்கான இச்சட்டவரைவும் அவற்றில் அடங்கும். நீங்கள் பெறுகின்ற சேவைகள் பற்றிய முறையீடுகளைச் செய்வதற்கு ஆரம்பித்தற்கான நடைமுறைகள் பற்றிய தகவலினையும் நீங்கள் எழுத்து வடிவத்தில் பெற்றுக் கொள்ள முடிதல்.